

# முருகனருள்

முகில்வண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனருள்




கண்மணி பிரசுரம்

நெசவு நிலைய வீதி, பாண்டிருப்பு-01.
கல்முனை. இலங்கை.

LENDING SECTION
UTHAMUNAI
PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு எண்
வரவுப் பதிவு எண்
மட்டை கட்டுதல்
மறு மட்டை கட்டுதல்

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூல்: | முருகனருள் |
| வகை: | பக்திக் கவிதைகள் |
| ஆசிரியர்: | முகில்வண்ணன் |
| இயற் பெயர்: | வேலுப்பிள்ளை சண்முகநாதன் |
| உரிமை: | ஆசிரியருக்கே |
| அளவு: | 1/8 |
| பக்கங்கள்: | 87 + iv |
| வெளியீடு: | கண்மணி பிரசுரம். நெசவு நிலைய வீதி, பாண்டிருப்பு 01, கல்முனை. |
| அச்சகம்: | ஏ. ஜே. பிரின்டர்ஸ். 44, புகையிர நிலைய வீதி, தெகிவளை. |
| ISBN இல.: | 9789555401104 |
| முதற் பதிப்பு: | மார்கழி 2011 |

விலை இலங்கை ரூபாய்: Rs. 220/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

LENDING SECTION
MARUTHAMUNAI
PUBLIC LIBRARY

1968 முதல் முருகன் மீது கவிதைகளை எழுதிக் குவித்துக் கொண்டிருப்பவர் **கவிஞர் முகில்வண்ணன்** அவர்கள். பல நூற்றுக் கணக்கான கவிதைகளை எழுதியிருந்த போதும், சில கவிதைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்ய வேண்டும் என்று 1985 இல் இருந்து முயற்சித்து வருகின்றார்.

கல்முனை முத்தமிழ் கழகம் தோற்றுவித்த போதும், இதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். அதுவும் கைகூடவில்லை. இப்போது கல்முனை தமிழ்ச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்ததும், ஒரு முருக பக்தரின் நட்புக் கிடைத்தது.

அவரது உந்துதலினால் முருக பக்தரான **முகில்வண்ணன்** இந்த முருகனருள் நூலை வெளியிடும் முயற்சியில் இறங்கி, இப்போது அது கைகூடி உங்கள் கரங்களில் நல்லதொரு பக்தி நூலாகத் தவழ்கிறது. அதற்கு ஆதரவு தரவேண்டியது முருகனடியார்கள் அனைவரினதும் கடமையாகும்.

கவிஞர் முகில்வண்ணன் அவர்களின் கவிதையைப் படிக்கும் போது அவர் முருகன் மேல் கொண்டிருந்த பற்றும், பக்தியும் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

முருகன் மீது பக்தி கொண்டவர்கள் இவற்றைப் படிக்கும் போது, இது தமது பக்தியையே வெளிக் காட்டுவதாக அமைந்து இருப்பதைக் காண்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப் பரவசம் சொட்டும் பாடல்களை முருகனில் பக்தி கொண்டவரே பாட முடியும் என்பதை இப்பாடல்கள் மூலம் நிரூபித்திருக்கின்றார் **திரு. முகில்வண்ணன்** அவர்கள். முருகனருளால் அவருக்கு எல்லா நலனும் நிறைவதாக.

**உமா சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நான் ஒரு முருக பக்தன். ஆரம்ப காலத்தில் இருந்து முருகப் பெருமானைத் தவிர வேறு எவரையும் வணங்காதவன். இதனால் தானோ என்னவோ முருகனின் காட்சிகள் எனக்குக் கிடைத்தன.

முருகப் பெருமான் என்னோடு பேசினார். அவரருள் என்னை ஆட்கொண்டிருக்கிறது. வருமுன் அனைத்தையும் எனக்கு காட்டி அருளி இருக்கிறார். அவனருளால் எத்தனையோ பிரச்சினைகள், ஆபத்துக்கள் எல்லாம் பரிதி முன் பனிபோல் மறைந்து போய் இருக்கின்றன.

முருகப் பெருமான் மீது நான் நிறையவே கவிதைகள் எழுதி இருக்கிறேன். எல்லாம் அவரை அனுபவித்து எழுதியவை. எழுதிய மூன்று தொகுதிகளில் முதலாவது இது. எழுதச் சொன்னவன் அவன். அதனால் நான் எழுதினேன். அவரருளை நான் அனுபவித்ததால் தான் ஆரம்பத்தில் நான் எழுதிய கவிதைகளைத் தொகுத்த போது அதற்கு ''முருகனருள்'' என்று தலைப்பிட்டேன்.

இதில் தொகுக்கப்பட்டுள்ள கவிதைகள் பெரும்பாலும் பத்திரிகைகளில் வெளிவந்தவை. இவை வெளிவந்த பத்திரிகைகள் ***வீரகேசரி, தினகரன், தினபதி, மித்திரன், தினத்தந்தி, நவமணி*** என்பவற்றைக் குறிப்பிடலாம். முதலில் இந்தப் பத்திரிகைகள் அனைத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சில கவிதைகள் நூலாக்கும் தேவை கருதிச் சேர்க்கப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் குறிப்பாக **இலங்கை வானொலி**யில் ஈழத்துப் பாடலாக ஒலிபரப்பாகிய **''பாட்டால் முருகன் நாமம் பாடவேண்டும்''** என்னும் பாடலும் நான் சவூதியில் இருக்கும் போது **வீரகேசரியில்** எழுதிய **''திருக்கோலம் காண ஆசைப்பட்டேன்''** என்னும் கவிதையும் என் உள்ளத்தில் நிறைந்து நிற்பது மட்டுமின்றி வேறு பலரது உள்ளத்திலும் நிறைந்து பாராட்டையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**'பாட்டால் முருகன் நாமம் பாட வேண்டும்'** என்னும் பாடல் எனது மூத்த மகன் பிரேம் நந்தகுமாருக்கு மிகவும் பிடித்தமானது. அவர் சிறுவனாக இருக்கும் போது இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஈழத்துப் பாடல்கள் நிகழ்சியில் ஒலிபரப்பாகின்ற போதெல்லாம் மிகவும் ஆர்வமுடன் **''அப்பாவின் பாடல் போட்டிருக்காங்க..''** என்று மற்றவர்களுக்கும் கூறிக் கொண்டு வானொலி அருகே ஓடிச் சென்று கேட்டுக் கொண்டிருப்பார். இன்றும் அவர் அதனை அடிக்கடி நினைத்துக் கூறுவார்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதில் அதீத நம்பிக்கை கொண்டவன் நான். இப்பாடல்களை அவனருளாலே பாடினேன் என்றால் இவை நூலுருவாக வெளிவருவதும் அவன் அருளினால் தான். அதற்காகவும் ஒரு முருக பக்தனை அவரே தேர்ந்தெடுத்து இருக்கும் அவரன்பை நான் எவ்வாறு எடுத்துக் கூறுவேன்.

இந்நூலுக்கு அன்பு உரை வழங்கிய **அமரர் கவிஞர் பாண்டியூரன்** அவர்களும் அருளுரை வழங்கிய **அமரர் எஸ். செல்லத்துரை** முன்னாள் அதிபர் அவர்களும் இருக்கும் போதே இதை வெளியிட முடியாமல் போனது எனக்கு மனவருத்தத்தை தருகின்றது.

என்றாலும் அவனுடைய திட்டத்தை யாரால் மாற்ற முடியும்? மேலும், இந்நூல் வெளி வருவதற்கு காலாய் இருப்பதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்கூர்ந்து அணிந்துரை வழங்கிய தமிழ்த் தென்றல் கலாநிதி **பரதன் கந்தசாமி** (முருக பக்தர்) நால்வர் கோட்டம், பணிப்பாளர் அவர்களுக்கும் திருமுருகன் திருவருளை நாடி நிற்கின்றேன்.

இதனை நூலுருவாக மாற்ற பக்க வடிவமைப்பு மற்றும் கணினி நெறியாள்கை செய்த திரு **சு. உமாச்சந்திரன்** அவர்களுக்கும் முருகனருள் கிடைக்க வேண்டுகிறேன்.

இதே போன்று இது வெளிவர நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்னின்று உழைக்கும் அனைவருக்கும் முருகனருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**முகில்வண்ணன்**
**வே.சண்முகநாதன்**

பாண்டிருப்பு 01.
கல்முனை.

மின்னஞ்சல்: info@shanmukil.com
shanmukil@yahoo.com

இணையத்தளம்: www.shanmukil.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு உரை

அமரகவி **பாண்டியூரன் திரு. கு. கணபதிப்பிள்ளை**
ஆசிரியர் அவர்கள் வழங்கிய அன்பு உரை.

வானொலியின் மெல்லிசைக்கு
மவுசு தரும் பாவளித்து மணக்கச் செய்தும்
நாளிதழில் சஞ்சிகைகளில்
நாடறியக்கதை, நாவல், கட்டுரைகள்
தேனொழுகப் புனைந்தளித்தும்
திருவாசகம் மூழ்கித் திழைத்து முத்துக்
கோத்தரிய **'வெள்ளி விருந்'**
தளித்தற்கும் குறிக்கொண்டுள்ளோன்!

*****

**''முகில்வண்ணன்''** கா.வே. சண்
முகநாதன் இதயத்தில் மலர்ந்த பூக்கள்
மகிமைத்தாம் முருகன் பால்
அவன் சூடும் **'முதலேடு'** முதன்மையான
அகில் போலும் மணம் வீசி
ஆன்மாக்க ளிதயத்தை அள்ளிக் கொஞ்ச
மகிழ்வோடு குமரன் தாள்
மலர் தூவிச் சிரமேத்தி வாழ்த்துவனே!

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் பால் அன்புற்ற
முகில்வண்ண னிதயத்தில் முகிழ்த்த பூக்கள்
கருகாத மெய்யன்புக்
கடம் பொக்கும் காலத்தை வென்று நிற்கும்!
அருள்வான் செங்கதிர் வேலன்!
அழியாத கவியூற்றும் ஆக்கும் வண்பும்!
பெறுவார் நற்பேரின்பம்! கலையுள்ளம்!

*****

அமரகவி **"பாண்டியூரன்"**
**கு. கணபதிப்பிள்ளை.**

பாண்டிருப்பு 01.
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளுரை

முன்னை நாள் அதிபர் **அமரர் எஸ். செல்லத்துரை**
அவர்கள் வழங்கிய அருளுரை

உருகு மனத்தால் உன் அன்பன்
உருவும் திருவும் உன் சாயல்!
பெருகும் உவகைப் பெருக் காற்றைப்
பிறரும் பருகப் பிழை யேதும்
மருவா மழலை மொழி யாலே
முன் வந்துரைத்தான் **'முகில் வண்ணன்'**
முருகார் கடம்போ டிசை மாலை
முருகா பொருத்தம் சூடுகவே!

அருணகிரி புகழோடு அனுபூதி
கேட்டு மனம் குளிர்ந்தா யன்று!
குருபரனார் அருள் பிள்ளைத் தமிழோடு
கவி பாடக் குறைகள் தீர்த்தாய்!
திரு முருகாற் றுப்படையால் நக்கீரன்
துயர் களைந்தாய் முருகா! இன்றோர்
முருகனரு ளிசைப்பாவை **'முகில் வண்ணன்'**
முன் வைத்தான் அருள்க நன்றே!

**அமரர். எஸ். செல்லத்துரை**
பாண்டிருப்பு 01, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழ்த் தென்றல் கலாநிதி **பரதன் கந்தசாமி**

(B.A, B.com.(sp), M.A. Hons., M.Phil., Dip-in-Ed., Dip – in- Journalism)

(பணிப்பாளர், நால்வர் கோட்டம், தலைவர் கல்முனை தமிழ்ச் சங்கம்)

அவர்கள் வழங்கியது.

இயற்கையே இறைவன். இறைவனே இயற்கை. இயற்கை வழிபாடுதான் இந்துமத வழிபாடு. இந்துமத வழிபாடுதான் தொன்று தொட்ட வழிபாடு. தொன்று தொட்ட வழிபாடுகளில் ஒன்றுதான் குன்று தோறாடும் குமரன் வழிபாடு. குமரன் குறிஞ்சிக் கடவுள் என்கிறது தொல்காப்பியம்.

ஆறுமுக சிவனாய் அம்புயத்தில் அவதரித்த அருணைப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஐந்து வீடுகள் மலை மேல் அமைந்துள்ளன. ஈழத்தில் கதிர்காமம், தில்லியில் உத்தர சுவாமி மலை, மலேசியாவில் பத்துமலை யாவும் மலைக் கோவில்களே!

தென்பொதிகை மலையினிலே தோன்றிய பொற்சுடரில் உதயத்தைக் கண்ட செந்தமிழ் கடவுளாகிய முருகப் பெருமான், உலகின் பல நாடுகளிலும் உள்ள கோவில்களில் மட்டுமல்ல கோடிக் கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களில் நிலைத்து நின்று அருள் பாலித்து வருகின்றார்.

சக்திக்கு வித்தான முத்தமிழ் முருகனை பக்திக்கு வித்தான பக்தன் ஒருவன் நினைத்து விட்டாலோ உள்ளம் உருகும். கண்கள் பனிக்கும். பக்தி ரசம் ததும்பும். பாமாலை வெள்ளம் பரவும். பரகதி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் அருள் பெற்றவர் எங்கள் முகில்வண்ணன் சண்முகநாதன். இயற்பெயரிலும், புனை பெயரிலும், நூற்பெயரிலும் முருகனருட் திறம் பொருத்தம் காணும், அன்பரின் பாத்தொடையல்கள் முருகனடியார்க்கு ஒரு புதையல் என்று சொல்லலாம். ஆன்மீக பாதையிலே தன்னை ஆற்றுப் படுத்தி, புடம் போட்ட பக்தி வெளிப்பாடாய், யாத்தளிக்கப் பட்டதாகவே இப்பாடல்கள் காணப்படுகின்றன.

**பக்திரசம் பரவும் இப்பாத் தொடையலிலே**
**''தந்தையென எந்தனுக்கு வந்த தவ வேலன்**
**வந்துதிக்க நான் புவியில் வாய்த்தவொரு காலான்''**

என தந்தையார்க்கு சமர்ப்பணம் செய்வது, இவரை சான்றாண்மை மிக்க சித்தன் என்ற நிலைக்குக் கொண்டு செல்கின்றது. பல பாடல்களில் படிப்போர்க்கு இதம் தரும் இசையோட்டம் விரவிக் கிடக்கிறது. உண்மையிலே இப்பாடல்களை பக்தி சிரத்தையுடன் உளம் உருகிப் பாடுங்கள், இசை வெள்ளம் தோன்றும், சிந்தை நெகிழும், பாடப் பாடப் பரவசமாகும். கேட்கக் கேட்க மகிழ்ச்சி வெள்ளம் பெருகும். முருகனருள் கிடைக்கும். வாழ்வு மலரும். இது போன்ற பல பக்தி இலக்கியங்களை இவர் இந்த உலகிற்கு யாத்தளிக்க வேண்டும், எனக் கேட்டு எல்லையில்லா ஆனந்தமளிக்கும் எங்கள் தமிழ் முருகனைப் பணிந்து போற்றுகின்றேன்.

**''அந்த மில்லா முருகனருள் கூறு மவனிதனில்**
**செந்தமிழ் சொல் சிறந்தோங்கும் முகில்வண்ணன்**
**புகல்ஞான மலர்த் தொடையல் பாடும் தகவுடையோர்**
**அகல் ஒளியைக் கண்டு குகனருளில் திழைப்பர்''**

கலாநிதி **பரதன் கந்தசாமி**

பணிப்பாளர்,
நால்வர் கோட்டம் (அன்பு ஆஸ்ரமம்)
கல்முனை.
27.07.2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

பாண்டவர்கள் வாழுமுயர்
பாண்டிருப்பில் வாழ்ந்த
பாண்டவரில் ஒருவரெனும்
பார்த்திபனார் என்ற
ஆண்டவர்கள் பரம்பரையோன்
**''அருச்சுனராம் வேலன்''**
மாண்டாலும் இப்புவியில்
மங்காத புகழோன்!

தந்தையென எந்தனுக்கு
வந்ததவ வேலன்
வந்துதிக்க நான் புவியில்
வாய்த்தவொரு காலான்!
அந்தமகான் தந்ததிரு
அன்புமகன் இங்கே
கந்தனுக்கு பாத்தொடையல்
கட்டி மகிழ்தற்கு...

எண்ணமிகக் கொண்டுநிதம்
ஏற்றமலர் கொய்தேன்!
அண்ணலவன் பேரருளும்
அறுமுகத்தின் நோக்கும்
வண்ணமலர் பாமாலை
வாட்டமுறா தாக்க
சண்முகனென் தந்தைக்குச்
சமர்ப்பணம் செய்தேனே!

N...RUTHAMUNAI
PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு



முந்தி வணங்குகின்றேன்
மூத்தவனின் தாளிணைகள்
முன்னிற்க வேண்டுமையா!
முயற்சிகள் வெற்றிபெற!

தொந்திக் கணபதியே
தோத்தரித்தேன் நின்பாதம்!
தூயவருள் பாய்ச்சித்
துணைநிற்க வேண்டுமையா!

சிந்துகவி பாடுதற்குச்
சீர்த்ததுணை செய்யுமையா!
செந்தமிழின் மென்மலர்கள்
செங்கையினால் தாருமையா!

விந்தைமிகும் நின்னரிய
வேதவிழி பார்த்தாலே!
வேலன்நின் தம்பிமேல்
வெண்பாக்கள் பூக்காதோ!

PUBLIC LIBRARY
JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 01.

## துன்பம் இனியேது?

பார்க்கவே மாறுமையா!
பழவினைகள் தீருமையா!
கேட்கவே உன்புகழை
கீழ்பிறப்பு மாளுமையா!
தீர்க்கவே என்வினையை
தேடிவந்தேன் உன்துணையை!
திருவடியைச் சரணடைந்தேன்!
தீருமையா என்வினையை!

வெள்ளத்தில் தவழ்ந்தவனே!
வினைநாண் ஒழிப்போனே!
உள்ளத்ததை தலமாக்கி
உன்னொளியை இருத்தினனே!
தெள்ளுதமிழ் காவலனே
தேவர்குறை தீர்ப்பவனே!
வெள்ளம்போல் அருள்பொழிய
வேலனன்றி யாருளரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலை உடையானே!
அழகுக்கு அதிபதியே!
நீறுபோல் வெந்துநின்றேன்!
நினதருளை வேண்டிநின்றேன்!
ஆறுதலை அளிப்பவனே!
அருள்புரிய வேண்டுமையா!
வேறுதுணை இல்லையென்று
வேண்டுவதும் கேட்கலையோ?

கதிர்காமத் துறைபவனே!
கந்தாஎன் இறைநீயே!
புதிதாக எனையின்று
புடம்போட நினைத்தாயோ?
அதிகமாய் நொந்துவிட்டேன்
அறிவாயோ முருகாநீ
கதிர்காமம் தேடிவந்தேன்
கருணைதர மாட்டாயோ?

துன்பத்தைத் தருவதெல்லாம்
தூயவனாய் மாற்றுதற்கு?
என்பதனில் ஐயமில்லை!
இனித்துரயரை மாற்றிவிடு!
இன்பநுகர் பொருளெல்லாம்
எனக்கினிமேல் நீயன்றோ?
துன்பமென்று இனியேது?
துணையிருக்க நின்னடியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிவந்தேன் உன்பாதம்
பெற்றுவிட்டேன் உனதருளை!
காணவந்தேன் உன்னழகை
கண்டுவிட்டேன் உன்னெழிலை!
நாணிநின்றார் உனதருளால்
நாத்திகர்கள் மாறிவிட்டார்!
ஏனினிமேல் பெருந்துயரம்
இறைவாஉன் துணையிருக்க!

**தினகரன்**
**ஜூலை 69.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



02.

# கதிர்காம வேலன்!

கதிர்காமம் நோக்கி வந்தேன் வேலவா – உன்னைக்
கண்டு துதிக்க வந்தேன் வேலவா!
கதிரமலை ஏறிவந்தேன் வேலவா – உன்னைக்
கை கூப்பி வணங்க வந்தேன் வேலவா!

செல்லக் கதிர்காமம் தேடி வந்தால் – நீ
தீர்க்காத வினைக ளுண்டோ வேலவா!
சொல்லித் தீர்க்க வந்தேன் வேலவா – மனச்
சுமையைக் குறைக்க வந்தேன் வேலவா!

அள்ளிப் பருக வந்தேன் வேலவா – உந்தன்
அழகையே காண வந்தேன் வேலவா!
புள்ளி மயில் வாகனனே வேலவா – எந்தன்
புரை தீர்த்து நோய்தீரும் வேலவா!

கிட்ட நெருங்கி வந்தேன் வேலவா – உந்தன்
கிருபைதனை வேண்டி வந்தேன் வேலவா!
பட்ட துயர் போதுமினி வேலவா – அருட்
பார்வையால் நீக்கி விடும் வேலவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணையில் தவழ்ந்தவனே வேலவா – சிவ
சக்தியுமை மைந்தனே வேலவா!
அரவணைப்பு வேண்டி வந்தேன் வேலவா – எந்தன்
அன்னை தந்தை அனைத்தும் நீயே வேலவா!

தினகரன்
ஆகஸ்ட் 68.



LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



03.

## உண்மைத் தெய்வம்

உண்டுண்மைத் தெய்வம் என்று ஓடிவந்தேன்
உனையன்றி வேறு தெய்வம் நானும் காணேன்!
கண்கண்ட தெய்வம் நீ கருணை செய்வாய்
காலத்தின் நோய் தனையே தீர்த்து வைப்பாய்!

பசுந்தமிழிற் பாவிசைக்க பண்டிதனுமல்ல!
பாமரன் நான் உன் புகழை அறிந்தேனுமல்ல!
விசுவாசம் கொண்டு வந்தேன் வேலா எந்தன்
வினைகளைவ தெப்பொழு தென்றருள் வாயின்றே!

ஆறிரண்டு கண்ணிருந்தும் பயனுண்டாமோ?
அடியேனின் துயர்தனை நீ பார்க்க விட்டால்?
ஆறிரண்டு காதிருந்தும் பயனுண்டாமோ?
அடியேனின் முறைப்பாடு கேட்கா விட்டால்?

வீறோடு விம்மி நிற்கும் தோள்களெங்கே?
வினைகளையே வீழ்த்துகின்ற வேலும் எங்கே?
கூறுபோட் டேறியமர் மயிலும் எங்கே?
கூறு மடியார் வினை தீர்ப்பதெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறு மயில் ஏறிவர வேண்டும் ஐயா!
என் வினைகள் தீர்க்கவர வேண்டுமையா!
மாறுபட வதைத்த தினிப் போதுமையா!
மன மிசைந்து கருணைபொழிந் தருள்வாயையா!

நம்பியே யுன்னருளை நாடி வந்தேன்!
நாத்திகரே பார்த்தென்னை நகைக்க வைத்தாய்!
தம்பியே கரிமுகற்கு சரவணா! உன்
தாள் சரணம் துணைசெய்ய வருவாய் ஐயா!

சரணடைந்தேன் உன்பாதம் விடவும் மாட்டேன்!
சாவரையும் உன்நினைவை அகற்ற மாட்டேன்!
விரைந்து வந்து எனக்கருள் நீ புரியவிட்டால்
வீணாக உன்னடியில் வீழ்ந்து மாள்வேன்!

**தினகரன்**
**ஜூலை 70.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



04.

# யாமிருக்கப் பயமேன்?

வான் உண்டு மதியுண்டு
வானவர் குறை உண்டோ -- இன்னும்
நானுண்டு நீயும் உண்டு
நமக்குள்ளே பேதம் ஏனோ?

தேனுண்டு சுவையில்லை!
தே வுண்டு குறையில்லை - ஏனோ
நா னுண்டு சுகமில்லை!
நா தனுன் அருளெங்கே?

நீ வேண்டி அழுததும் ஒரு
நிகரில்லாப் பழ மன்றோ? - பக்தன்
நான் வேண்டி அழுவ தெல்லாம்
நாதன் உன் அருள் ஒன்றே!

களங் கண்டு போராடி
கங்கை கண்டு நீராடி --கதிர்
காமம் கண்டு இளைப்பாறும்
கந்தா நீ அருள் வாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளம் உண்டு உனக்காக
உன்னருள் உண்டு எனக்காக – ஞானப்
பழம் வேண்டி அழுதாயே!
பழம்நீ இன்றருள் வாயே!

யானை முகன் கொண்டு துணை
யான குற வள்ளி யுண்டு – தெய்வ
யானை யுண்டு அடியார்க்கு
யாமினியும் பயமேனோ..?

நூலுண்டு புகழ் கூற
நானுண்டு இசை பாட – வெற்றி
வேலுண்டு வினை தீர்க்க
வேறேதும் துயர் உண்டோ?

மயிலுண்டு விரைந் தோட
மனமுண்டு நீ யாட – கதிர
மலையுண்டு மையல் கெள்ள
மறைந் துண்டோ இன்னுஞ் சொல்ல?

**ராதா**
**ஜூலை 70.**



MARUTHAMUNAI PUBLIC LIBRARY
11061



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 05.

## கருணை புரி முருகா!

கதிர்காமம் தேடி வந்தேன் முருகா – எனக்கு
கருணை புரிய வேண்டும் முருகா!
கதிரமலை ஏறி வந்தேன் முருகா – உந்தன்.
கடை விழியின் பார்வையருள் முருகா!

குன்று தோறும் குடியிருக்கும் முருகா – எந்தன்
குடிசையில் வீற்றிருக்க வருவாய்!
வென்று சூர் வீழ வைத்த முருகா – எந்தன்
வேதனையைத் தீர்த் தருள்வாய் முருகா!

உன்னையே நம்பி வந்தேன் முருகா – உலகில்
உற்ற துணை வேறெனக்கு இல்லை!
என்னை நீ ஆண்டு கொள்வாய் முருகா – எந்தன்
ஏழ்மையழித் தாண்ட ருள்வாய் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தந்தை நீயானாய் முருகா – எனக்கு
ஆறுதலை அருள்வாயே முருகா!
என்னையாள் இறையே நல் முருகா – என்னை
இடர் செய்யும் குறை தீர்ப்பாய் முருகா!

கந்தா கடம்பா கதிர் வேலா – உந்தன்
கருணையே வேண்டும் அருள்வாயே!
தந்தாய் அறிவாற்றல் முருகா –– உந்தன்
தயவல்லால் வாழ்வேது முருகா

**மித்திரன்**
**ஆகஸ்ட் 72.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06.

## செந்தில் வேல் குமரா!

செந்தில் வேல் குமரா முருகோனே!
செந்தமிழ் காவலாய் வருவோனே!
புந்தியில் வந்து அமர்வோனே!
சிறப்புற வளம் நீ அருள்வாயே!

தந்தையும் தாயுமாய் ஆனாயே!
தகப்பற்குச் சாமியாய் போனாயே!
வந்தனை செய்திட நீ வருவாயே!
வளமுற வாழ்த்தி நீ அருள்வாயே!

கோபமே கொண்டு நீ சென்றாய்!
குன்றின் மேல் ஆண்டியாய் நின்றாய்!
பாபம் பழ வினை தீர்ப்பாய்!
பாவிகள் உயிர் தனைக் காப்பாய்!

சூரனைப் போரிலே வென்றாய்!
சூதினால் வள்ளியை மணந்தாய்!
தாரம் இரண்டினைப் புணர்ந்தாய்!
தாரணி போற்றிட இருந்தாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் காமத் திருத்தலத் துறைவாய்!
கந்தா என்றழை த்ததும் வருவாய்!
பதியாறு கொண்டு நீ யமர்ந்தாய்!
பாவங்கள் தீர்த்து வீடருள்வாயே!

தினபதி
70.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



07.

# கந்தனைக் கண்டால்...!

கதிர்காமம் சென்று கந்தனைக் கண்டு வந்தால்
கவலைகள் தீருமடா!
களிப்பும் தோன்றுமடா!

பதிகளாறு கொண்ட பரமனைக் கண்டு வந்தால்
பாவம் அழியுமடா!
பழவினைகள் தீருமடா! (கதிர்...)

*****

நெஞ்சத்தில் சுமை கொண்டு நித்தமும் நீயழுதால்
நீங்காது பாரமடா!
நினைவுமே சோகடா!

அஞ்சாது சரண் அடைந்தால் அவன் திருவடியை
அபயம் அளிப்பானடா!
ஆறுதல் தருவானடா! (கதிர்...)

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் முருகன் நினைவைக் கொண்டிருந்தால்
நெருங்காது துன்பமடா!
நினைக்கவே இன்பமடா!

பஞ்சு மலர்ப் பாதம் பரமன் எழிற் கோலம்
பார்த்தாலே போதுமடா!
பயனை அடைவாயடா! - பிறப்பின்
பயனை அடைவாயடா! (கதிர்...)

தினகரன்
87.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



08.

# அனைத்தும் நீ முருகா!

எந்தை நீ எனக்கருள் புரிபவன் நீ!
சிந்தை நீ சிவனுக்கு உபதேசம் செய்தவன் நீ!
தந்தை நீ தயை தாய்போல் தருபவன் நீ!
கந்தா நீ கலியுகக் கடவுள் நீயே!

நிந்தனை செய்வாரை நினைப்பவன் நீ!
வந்தனை செய்திடவே வருபவன் நீ!
எந்தனை ஆட்கொண்டு அருள்பவன் நீ!
தந்தனை தாழ்விலா வாழ்வும் நீயே!

அருவும் நீ உருவும் நீ அழகும் நீ அன்பம் நீ!
கருவும் நீ உயிரும் நீ கதியும் நீ விதியும் நீ!
குருவும் நீ குழந்தை நீ மனையும் நீ மலரும் நீ!
அருளும் நீ மருளும் நீ அனைத்தும் நீயே!

தினகரன்
மே 78.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



௦௯.

## உனையன்றி வாழ்வேது?

உனையெண்ணி எண்ணி ஏங்குகிறேன் நானப்பா – உந்தன்
உருவத்தை கண்டு நான் மகிழ்வ தெப்போ?
எனையேங்க வைப்பதுன் தொழிலே யப்பா – எந்தன்
ஏக்கம் தீர வழி கூறு கந்தப்பா!

கதிர்காமம் தேடிவர வேண்டும் நானே – செல்லக்
கதிர்காமம் வந்துன்னைக் காண வேண்டும்!
கதிரமலை ஏறியே வருவேன் நானே – அங்கே
களித்திருக்கும் காட்சியைக் காண்பேன் நானே!

வேதனை மேல் வேதனையே போதுமையா – எந்தன்
வேண்டுதல் உன் காதில் விழவில்லையோ?
சோதனையை நிறுத்திவிடு நின் சேயின்பால் – என்
துயர் தனையோர் நொடிப்போதில் தீர்ப்பாயையா!

உனையன்றி வாழ்வேது உலகின் மீது – உன்
நினைவின்றி உயிரேது உடலின் மீது...?
எனையன்றி நீ நினைப்ப தெவரையையா – உனதருள்
எனக்கன்றி எவர்க்குண்டு புவியின் மீதே!

LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10.

## கவலைப் படலாமோ?

கதிர்காமம் தேடி வந்து
கண்குளிரக் காண வேண்டும்!
நேர்த்திக் கடனை எல்லாம்
நிறைவேற்றி மகிழ வேண்டும்!
என்றிருந்த எண்ண மெல்லாம்
ஈடேற வில்லை யப்பா!
ஏழைநான் என்ன செய்வேன்?
எண்ணி அழுவ தல்லால்...?

எண்ணியே இருந்தேன் ஐயா
எழில் உருக் காணவென்று!
ஏனின்று தடுத்து விட்டாய்?
இறைவனே முருகை யாவே?
பண்ணிய பாவம் எல்லாம்
பாரில்நான் தொலைப்ப தெப்போ?
பாலனே முருகை யாவே
பார்த்தருள் புரியும் ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நான் பார்க்கவில்லை
என்றொரு காரணத்தால்
உன்னை நான் மறந்தேனோ
உறக்கத்தில் வீழ்ந்தேனோ?
என்னையேன் தடுத்து விட்டாய்?
இறைவா முருகை யோனே!
ஏழை நான் இத்தனைக்கும்
என்ன தான் பாவியப்பா!

மனதாலே பாவம் ஒன்றும்
மானிடர்க்குச் செய்தே னில்லை!
மன்னனே உன் பாதம்
மறந்தும் கணம் வாழ்ந்தறியேன்!
முன்னமே செய்த வினை
முடிவெய்தா திருக்கி றதோ?
முருகா நீ நினைத்தால்
நான் ஏனோ அழவேண்டும்!

அழுதென்னை அர்ப்பணித்து
உன்னருளைப் பெற்றிடுவேன்!
விழுந்தெழுந்து கும்பிட்டால்
வேண்டியதைப் பெற்றிடுவேன்!
எழுதிப் பா விசைத்திடுவேன்
ஏற்றமே பெற்றிடுவேன்!
தொழுதகை நீ இருக்கையிலே
துயர் ஏது முருகோனே!

LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தனை செய்தவர்க்கும்
　　　　நீயருள் புரிவாயென்றார்!
வந்தனை செய்து நின்றேன்
　　　　வரந்தர வில்லை நீயே!
எந்தனை இன்னுமேனோ
　　　　இடர்செய்யத் துணிந்தாயையா?
கந்தனை வணங்குவோர்
　　　　கவலையில் மூழ்கலாமோ?

**தினபதி**
**ஜூலை 77.**



LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 11.

## முருகன் நாமம் பாட வேண்டும்!

பாட்டால் முருகன் நாமம் பாட வேண்டும்!
பாவம் பழவினைகள் தீர வேண்டும்!
கேட்டால் திருப் புகழைக் கேட்க வேண்டும்!
கேளாது புகழ் வந்து சேர வேண்டும்!

பாட்டால் முருகன் புகழ் பாட வேண்டும்!
பாவலனாய் நானிங்கு மாற வேண்டும்!
கேட்டால் வரமெனக்குத் தர வேண்டும்!
கேளாது துயர் தன்னைத் தீர்க்க வேண்டும்!

பாட்டால் முருகன் எழில் பாட வேண்டும்!
பாரில் உவமை யெது கூற வேண்டும்!
கேட்டால் அவன் கருணை கேட்க வேண்டும்!
கேளாது எந்தனுக்கு அருள வேண்டும்!

பாட்டால் மன முருகிப் பாட வேண்டும்!
பார்ப்போர் அனைவரும் சேர வேண்டும்!
கேட்டால் அவன் பாடல் கேட்க வேண்டும்!
கேட்போர் அனைவருமே பாட வேண்டும்!

**இலங்கை வானொலியில் ஈழத்துப் பாடல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12.

## ஆண்டருள்வாயே!

அன்னையும் தந்தையும் ஆனவன் நீயே!
ஆறுதல் தந்து அருள்பவன் நீயே!
என்னையும் ஆண்டிடும் இறையவன் நீயே!
எழில் வடிவான முருகனும் நீயே!

தந்தைக் குபதேசம் செய்தவன் நீயே!
தகப்பன் சாமி ஆனவன் நீயே!
சிந்தை முழுவதும் நிறைந்தவன் நீயே!
சிறியவன் என்னை ஆண்டருள்வாயே!

தாயினும் இனிய தயவுடை யோனே!
தாள் பணிவோர்க்கு அருள் புரிவோனே!
கோயிலும் நெஞ்சாய்க் கொண்டவன் நீயே
குறைகளைந் திடும்வேற் குமரவேள் நீயே!

உண்டியும் உடையும் கொடுத்தவன் நீயே!
உயர்திரு மலையில் அமர்ந்தவன் நீயே!
அண்டியே உன்னைச் சரண் அடைந்தேனே!
அடியவன் என்னைக் காத்திடுவாயே!

**தினபதி**
**ஜூலை 78.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13.

## உனக்கேன் முருகா?

11064

வள்ளி தெய்வானையும் வடிவேலும்
புள்ளி மயிலும் உனக்கேன் முருகா?
உள்ளித் தொழுவோர் உனதடியார்க்[கு]
உள்ள குறையை நீ தீர்க்கா விட்டால்....?
[வள்ளி...]

ஆறிரண்டு கண்ணிருந்தும் பார்க்காதிருப்பாய்
அடியார்கள் எத்தனையோ கோடியுனக்கன்றோ?
ஆறிரண்டு காதிருந்தும் கேட்காதிருக்கும்
அதனால் அன்றோ இருபெண் அருகேதந்தோம்!
[வள்ளி...]

அடியார்கள் துயர்தனையே கேட்டுச்சொல்ல
அழகியரை நாம் தந்தோம் ஆனால் அந்த
துடியிடையார் அழகிலே சொக்கி நின்றால்...
துக்கத்தில் நாமிங்கு துடிப்பது தானோ?
[வள்ளி...]

வருந்துயரில் மிகவருந்தி மனமே நொந்து
வாடிஏங்கித் தவிக்கவோ ...? துடிக்கவோ...? நீ
அருந்தியவர் இதழினிமை அதில் மகிழ்ந்து
அகிலம் மறந்து ... இருக்கவோ...?
[வள்ளி...]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



14.

## ஆறுமுகா என்றால்...!

அறுமுகா என்றால் போதும்
அறும் வினைகள் ஓடி!
வேறு துணை நெஞ்சே
வேண்டுவதேன் கோடி?

நெஞ்சே அவனை நினை
நினைத்தால் துயர் நீங்கும்!
அஞ்சி நடுங்காதே!
அழகன் துணை நாடு!

கூறுமடியார் கள்வினை
தீர்க்கவென முருகன்
ஆறுபடை வீடு துணை
அருள்வான் மனம் உருக!

மனத்ததால் நினைத்து விடு
மாறும் பழ வினைகள்!
வனத்தில் அவன் இருந்தாலும்
நினைத்தால் வரும் வேல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

வேலும் கையில் உண்டு
விரையும் மயிலும் கொண்டு
பாலன் துணை வருவான்
பயமேன் நெஞ்சே வெருவ...?

ஆறுதலை உடைய அழகன்
ஆறுதலை உனக்கு அளிப்பான்!
தேறுதல் அடைவாய் மனமே
தேடியவன் பெயரைக் கூறு!

அடைவாய் அவன் பாதம்
அதற்காய் உருகு நின்று!
பாடிப் பரந் தேத்து
பயனில் மனம் சேர்த்து

LENDING SECTION





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15.

## காத்தருளும் வேலவனே!

காமத்தை அழிப்பதற்குக்
கதிர் வீசும் வேலவனே!
கதிர்காமத் துறைபவனே
கந்தா என்குறை களைவாய்!
தாமதமும் ஏனையா
தவித்து நான் நிற்கலையோ?
தாமரையில் தவழ்ந்தவனே
சண்முகனே அருள்வாயே!

காணுமெழிற் பெண்ணையெல்லாம்
கற்பழிக்க எண்ணுமிந்த
காமத்தைத் தடுத்தாளும்!
கதியளிப்பாய் முருகோனே!
காணுமிரு பெண்ணழகி
கந்தாவுன் அருகிருக்க
வேணுமெனக் கென்னுமிழி
வேட்கையினை அழிப்பாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*****

சக்தியிரண்டு கொண்டு சகத்தையே பாலிப்பாய்
பக்தி கொண்டு உன்னை நான் பணிகின்றேன்
முக்தி பெற வேண்டும் முருகா கதிர்வீசு!
சக்தி திருமைந்தா சண்முகா காத்தருள்வாய்!

*****

காத்தருளும் வேலவனே
கர்மத்தை நீக்கிவிடும்
பார்த்தருள வேணுமையா
பாவங்கள் தொலைவதற்கு
சாத்தானின் கலைக் கூடம்
சஞ்சலங்கள் தோற்றுவிக்கும்
அத்தனேயென் மனப்பேழை
அடைக்கலந்தான் உன்னிடமே!

என்றேனே என்துணையே
ஏற்கலையோ இன்னும்நீ
வென்றே நீ தரவேண்டும்
வேறுமனம் வேண்டாமே!
நன்றே மேற் செய்திடுவாய்
நாயகனே சொல்வதென்ன?
என்றும் நான் உன்னடிமை
ஏற்றமுற வேண்டுமையா!

தினபதி
ஜூலை 77.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



16.

# வெற்றி வேல் முருகா...!

ஓடி வாருங்கள் உள்ளத்தைத் தாருங்கள்!
பாடிப் பரவுங்கள் பக்தனாய் மாறுங்கள்!
நாடிச் செல்லுங்கள் நாதனைக் காணுங்கள்!
கூடிச் சொல்லுங்கள் குமரா! முருகா!
வேல் வேல் முருகா
வெற்றி வேல் முருகா!
வேல் வேல் முருகா
வெற்றி வேல் முருகா!

கங்கையில் ஆடுங்கள்! கடன்களைத் தீருங்கள்!
கந்தனைக் காணுங்கள்! கவலையைக் கூறுங்கள்!
சிந்தனை எல்லாமே சிவன் சேயை எண்ணுங்கள்!
முந்திய வினைச் சுமை முழுவதும் தீர்ப்பானே!
(ஓடிவாருங்கள்)

பாலனாய் எண்ணாதீர் பாதமே போற்றுவீர்!
வேலனைத் துதிப்பவர் வேண்டுவ தெய்துவர்!
காலனை வெல்லுவர் கந்தனின் அருளாலே!
வேலவன் நினைத்தாலே வேதனை தீருமே!
(ஓடிவாருங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகியே நின்று நாம் உள்ளத்தைத் தந்தாலே
அருகிலே வந்தெம்மை ஆட்கொள்வான் குமரனே!
முருகா என்றுள்ளம் உருகியே சொல்வோமே!
முருகோனே! முருகோனே! வெற்றிவேற் குமரனே!

(ஓடிவாருங்கள்)



LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17.

# எல்லாம் உந்தன் அருள்!

என்னைச் சுரண்டுவதில் என்ன பயன் ?
எந்தன் உடமை நீயன்றோ?
உன்னை முதலாகக் கொண்டே நான்
உழைப்ப தெல்லாம் உன்னுடமை!

மண்டூர் வந்தேன் உனைக் காண
மாலை தன்னைக் கைக் கொண்டாய்!
கண்டு களித்து கடன் தீர்க்க
கதிரமலை எல்லாம் ஏறி வந்தேன்.!

உள்ள தெல்லாம் இழந்து நின்றேன்!
உடமை யனைத்தையும் பெற்றாயே!
உள்ள தனைத்தைப் பெற்றாலும்
உளத்தில் என்றும் நீ இருப்பாய்!

இழக்க எதுவும் இல்லாமல்
இன்னும் வருவேன் நல்லூரில்
அழகன் உந்தன் காட்சியினை
அள்ளிப் பருகி மகிழ்வேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை இகழ்ந்து தூற்றிடினும்
எவரும் ஏற்றுப் போற்றிடினும்
உன்னை மறவேன் ஒரு நாளும்
உள்ள தனைத்தும் இழந்தாலும்!

முருகா என்னும் நாமம் தான்
முழுதும் நிறைந்த நெஞ்சோடு
உருகிக் கசியும் உளம் வேண்டும்!
உன்னை வணங்கும் கரம் வேண்டும்!

ஓடி ஆடிப் பாட அல்ல
உன்னை வலம்வரக் கால் வேண்டும்!
நாடி வருவேன் நானுந்தன்
நலத்தைப் பாடஅருள் வேண்டும்!

எதனை இழந்தாலும் கவலை இல்லை!
என்னை யிழப்பே னுன்னிடத்தில்!
எதனைத் தந்தாலும் ஏற்றிடுவேன்
எல்லாம் உந்தன் அருளன்றோ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



18.

## ஆசைப்பட்டேன்!

ஆரிடம் சொல்லி அழுதிடுவேன்?
ஆறுதல் தன்னைப் பெற்றிடுவேன்?
ஊரையும் உறவையும் விட்டுவந்தேன்!
உன்துணை ஒன்றே நாடிநின்றேன்!

நல்லூர் அமர்ந்து இருந்தாலும்
நாயகா உனக்குப் பலபலவீடு!
எல்லாம் எங்கும் எப்போதும்
எழுந்தருள் புரிவாய் நீயன்றோ?

தேரிலே எழுந்து அருளிடுவாய்!
தீர்த்தம் ஆடி மகிழ்ந்திடுவாய்!
நேரிலே நீயே இங்குவந்து
நிம்மதி தன்னைத் தந்திடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கா வனம்மட்டும் பார்த்திருப்பேன்!
புண்ணியா உந்தன் வரவினுக்கு!
ஆங்கது முடிந்ததும் உடனேநீ
அடியேனை நாடி வந்திடுவாய்!

வள்ளி தெய்வானை உடனேநீ
வரவேண்டும் இங்கு உடனேயே!
புள்ளி மயிலும் சுமந்து வரும்
புவனியை வலமும் வந்தவனல்லோ!

தீர்த்தம் ஆடி மகிழ்ந்திருக்கும்
திருக்கோலம் காண ஆசைப்பட்டேன்!
ஆர்த்த பிறவித் துயர்கெட நான்
அடியிணை போற்றி மகிழ்ந்திடுவேன்!

திருவிழா கண்டு மகிழ்ந்த பின்னர்
தேவா எழுந்து அருள்வாயே!
பெருவிழா காணும் பாக்கியமில்லை!
பெற்றிட ஆறுதல் தருவாயே!

**[சவூதி அரேபியாவிலிருந்து முகில்வண்ணன்]**
**வீரகேசரி**
**ஆகஸ்ட் 1983.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 19.

# ஆனந்தக் கண்ணீர்...!

‘அழுத குழந்தை பால் குடிக்கும்’
அறிவார் பலரும் பழமொழியாம்!
‘அழுதால் உன்னைப் பெறலாமே’
அழுதவர் மாணிக்க வாசகராம்!

அழுதேன் உன்னருள் பெறுவதற்கு
அடியேன் துயரைத் தீர்ப்பதற்கு!
அழுவேன் உன்னை அடைவதற்கு
அழகன் உன்னடி சேர்வதற்கு!

அழுவதைப் பார்த்தும் இரங்காமல்
அறுமுகா இருக்கின்ற கோலமென்ன?
அழுவேன் உந்தன் அருள்எண்ணி
ஆனந்தக் கண்ணீர் விடுவேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது அழுதே தீரவேண்டும்
அனுபவித்தே தீர்க்க வேண்டும்
'அழுதாலும் அவளே பெறவேண்டும்'
அதனால் பார்த்து இருந்தாயோ?

அழைத்தால் ஓடி வருபவனே
அழுதால் பார்த்து இருப்பாயோ?
அழுத கண்ணீர் துடைப்பதற்கு
ஆரோ இங்கு வருவாரோ?

அழுது அழுது அழிந்திடவா?
அருளைப் பெற்று வாழ்ந்திடாவா!
அழுகை ஆனந்த மாகிடவா!
அடியே சேர்ந்து அடைந்திடவா!

**தினகரன்**
**செப் 1985.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20.

## பாடும் பணியே...!

பாடும் பணியே பணி எனக்கு!
பணித்த வன்தான் நீ எனக்கு!
தேடிப் பணிவேன் நான் உனக்கு!
தேவை என்றும் பணி வெனக்கு!

வாடும் பயிராய் நானே இருப்பினும்!
வடிவேல் உன்னை வாழ்நாள் முழுதும்
பாடும் பணியாய் கொண்டவன் நானே!
பாவலனே எனக்[கு] அருள்புரி வாயே!

இன்பம் துன்பம் எது வரினும்
எழில்வேல் தன்னை நான் மறவேன்
என்பது எந்தன் உறுதி மொழி!
என்றும் பணிவேன் உன தடிகள்!

பதவி உயர்ந்த போதும் எனக்கு
பணிவு வேண்டும் உயர் வதற்கு
உதவி செய்தே வாழ்தல் எனக்கு
உடைய பணியாய் அருள் வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தன் பணியே தலைமேற் கொண்டேன்!
உந்தன் பணிப்பே எந்தன் செயல்கள்!
தந்தே திறமை தானருள் புரிவாய்
வந்தே அருள்வாய் வடிவேற் கரசனே!

தினகரன்
மார்ச் 1985.

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



21.

# வேண்டேன் வேறோர் தெய்வம்

வேண்டி வேண்டி அழுகின் றேனே
வேண்டும் என்றே அழுகின் றேனே
வேண்டு தல்தனை நீகேட் பாயே
வேண்டும் போது அருள் புரிவாயே!

வேண்டும் போது வருவாய் என்றார்
வேண்டி யதனைத் தருவாய் என்றார்
வேண்டும் வேண்டா தறிவாய் நீயே
வேண்டும் போது அருள்புரி வாயே!

வேண்டும் வரவும் வேண்டும் என்று
வேண்டி நின்ற தொழுகின் றேனே!
வேண்டும் தரிசனம் தரவும் வேண்டும்
வேண்டி நானும் பணிகின் றேனே!

வேண்டி என்னை ஆண்டு கொண்டாய்!
வேண்டா தென்றா விட்டு விட்டாய்!
வேண்டும் என்றே பிரிந்து நின்றாய்!
வேண்டி நானும் அழுகின் றேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

வேண்டும் எனக்கு இதுவும் வேண்டும்
வேண்டி உன்னைச் சரணடைந் தேனே!
வேண்டி நின்றேன் வேதனை தீர்க்க!
வேண்டிய தின்னும் அறிகி லையோ?

வேண்டி உன்னை அழுவ தல்லால்
வேண்டேன் வேலவா வேறோர் தெய்வம்
வேண்டேன் வாழ்வு கெடினும் வேண்டேன்
வேண்டி உந்தன் பாதம் பிடித்தேன்!

**தினகரன்**
**மார்ச் 85.**

LENDING SECTION
11061



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING SECTION



22.

## பன்னிரு கரத்தாய் வருக!

அருவாய் உருவாய் அழகிய வேலாய்
மருவாய் மலராய் மரகத மணியாய்
வெருவிடும் சேவலாய் வீசிடும் ஒளியாய்
வருவாய் குகனே வடிவேல் அழகா!

கந்தா என்பார் கடம்பா என்பார்
சுந்தரத் தமிழின் சுடரே என்பார்
வந்தனை செய்து வழிபட்டு நின்றார்
வந்தவர் குறைகளைத் தீர்ப்பதுன் கடனே!

வேலனாய் வருவாய் வெளியினில் நிற்பாய்
கோலமே கொண்டு குறத்தியை மணந்தாய்
சாலச் சிறந்த கடவுளென் றுன்னை
ஞாலமே பணிவதைக் காணவே வருவாய்

கூறுடை மயிலைக் கொண்டுநீ நின்றாய்
வீறுடை வேலைக் கையினில் கொண்டாய்
அறுபடை வீட்டினில் அவனியில் அமர்ந்தாய்
அறுவினை அறுப்பதற் கறுமுகன் ஆனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கரத்தாய் பரனே வருக!
என்னிரு கண்ணின் மணியே வருக!
கன்னியர் இருவர் உடனே வருக!
பண்ணிய பாவம் தீர்க்கவே வருக!

தினகரன்
ஜூலை 85.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



23.

## தவமேனும் செய்திலனே!

மயில் வாகனனே உன்னைச் சுமக்க
மயிலாக வேனும் பிறந்திலனே – அந்த
மயில்தான் செய்த தவமேனும் நான்
மண்ணில் பிறந்தே செய்திலனே!

நினைத்த போது வந்திடலாம்
நீள்புவி எங்கும் சுமந்திடலாம்! –– கந்தா
அணைத்து என்னில் அமர்ந்து இருப்பாய்!
அருகில் இருவரும் இருப்பாரே!

உன்னைச் சுமந்திடும் பாக்கிய மேனும்
உலகில் கிடைக்கும் என்றாலே – நானும்
இன்னும் என்ன கேட்டிடு வேனோ?
இதற்கே தவமும் செய்திலனே!

உந்தன் கையின் ஒளி வேலாய்
உருவாக இருந்தால் மகிழ்வேனே – முருகா
சொந்தம் உனக்கே ஆவேன் நானே
சுகமும் அதிலே எனக்குண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் தழுவி வைத்திருப்பாய்
காண்போர் கரம்தனை கூப்பிடுவார் –கந்தா
பையவே என்னை ஏவி விடுவாய்!
பாரில் அடியார் துயர் தீர்ப்பேன்!

ஏவலைப் பணிந்து செய்தி டுவேன்!
என்றும் அடிமை யாயிருப்பேன் -- எந்தன்
கேவலைப் புரிந்து அருள்புரி வாயே
கேட்டது தன்னைத் தருவாயே!

**தினகரன்**
**டிசம்பர் 85.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



24.

## இறைவனின் இருப்பிடம்!

காற்றினில் வருகின்ற ஓசைகள் எல்லாம்
கந்தனின் புகழ்பாடும் கீதங்களாம்!
ஊற்றினில் சுரக்கின்ற அத்தனையும் எங்கள்
உமைமகன் கருணையின் பேரருளாம்!

சேற்றினில் மலர்கின்ற மலர்கள் எல்லாம்
சிவமகன் அழகினைக் கூறிடுமாம்!
வற்றிய ஆற்றோரம் வளர்கின்ற மரங்கள்
வள்ளலின் கருணையைக் கூறிடுமாம்!

வரண்டிட்ட வனத்திலும் வற்றாத நதியிலும்
வடிவேலன் அருளினைக் கண்டிடலாம்!
இருள் சூழ்ந்த இரவிலும் ஏழைகள் முகத்திலும்
இறைவன் ஒளியினைக் கண்டிடலாம்!

குருவிகள் மயில்கள் குயில்களும் கூவிடும்
குரல்களில் அவன்குரல் கேட்டிடலாம்!
வருகின்ற இன்பமே வழங்கிடும் குழந்தை
வார்த்தையின் மழலையில் கேட்டிடலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுக்கு நேர்மையாய் வாழ்ந்திடுவோர் தங்கள்
நெஞ்சுதான் இறைவனின் இருப்பிடமாம்!
அஞ்யஞ்சி வாழ்ந்திடுவோர் அவன்தாள் பணிவோர்
அருளினைப் பெற்றிடும் அடியவராம்!

**தினகரன்**
**டிசம்பர் 85.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25.

# ஆடிவேல் முருகன்!

ஆறுதல் அளிப்பவன் ஆறமுகன் – எனக்கு
ஆனந்தம் தருபவன் ஆடிவேல் முருகன்
கூறிடும் வினைகளை தீர்த்திடுவான்! – தன்னை
கும்பிடு வோரை காத்திடுவான்!

வேண்டுதல் வேண்டாமை அறிந்திடுவான் – தன்னை
வேண்டி யழுவோரை புரிந்திடுவான்!
வேண்டுவதை தந்து அருளிடுவான்! – கந்தன்
வேண்டி யழும்போது தோன்றிடுவான்!

அடியவர் தன்னையே சோதிப்பவன் – முருகன்
அடியினை சரண் புகுந்திடிலோ
அபயம் தந்தெம்மைக் காத்திடுவான்! – தன்னை
அண்டிய பேரையே வாழ்த்திடுவான்!

பூசித்தல் வணங்குதல் பூசைகள் எளிது – கந்தனை
பாடியே பணிதலோ சிறப்பு!
நேசித்தால் போதும்வேறேதும் வேண்டாம்!–நம்
நெஞ்சிலே வந்துகுடி கொள்வானே!

வீரகேசரி
ஜூலை 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



26.

# மயிலே கொஞ்சம் நில்!

மயிலே! மயிலே! உன் தோகையெங்கே?
மறக்காமல் நான் சொல்வதைச் செய்!
அயலே நின்று ஆடும்வேளை
அன்பன் நிலையை அவரிடம் சொல்!

முருகன் ஊர்தி நீயன்றோ!
முழுதும் அறிவாய் நீயன்றோ!
உருகி நிற்கும் அடியாரை
உனக்கும் தெரிய வேண்டுமன்றோ!

என்னை மறந்து அவனிருந்தால்
எதற்கும் துணிந்து கூறிவிடு!
உன்னை நம்பி நானிருக்கேன்
உன்றன் துணையும் வேண்டுமன்றோ!

மையல் கொண்டு இருந்தாலும்
மயங்கி வள்ளியை அணைத்தாலும்
பையவே காதில் கூறிவிடு!
பாவியர் எம்மைப் பார்க்கச்சொல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ யானை மனைதேடிச்
செல்லும் வழியை மாற்றிவிடு!
மெய்யடி யாரின் துயர்தீர்க்க
வேலோடிங்கு வரவே சொல்!

உந்தன் சொல்லை ஒருநாளும்
ஒளிவேற் குமரன் தட்டிவிடான்!
எந்தன் குறையை நீகூறி
எனக்கருள் செய்ய இதமேசொல்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



27.

## கந்தன் கைவேல்!

வேலன் கைவேலைச் சொன்னால்
வினைகளகலும் – வெற்றி
விம்முதல் கொண்டு புயம்
விளங்கி நிற்கும்!
காலனும் கண்டு மனம்
கலங்கி நிற்பான்!–அருட்
கைச்சுடர் வேல் அவனை
கடத்தி நிற்கும்!

சக்தியுமை கொடுத்த
வேலல்லவோ – சூர
சம்ஹாரம் செய்த சக்தி
வேலல்லவோ
பக்தி கொண்டே பணிந்து
துதிப்பவர்க்கே –பழ
பாவ வினை அறுக்கும்
வேலல்லவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வணங்கிநிற் போர்க் கபயம்
வழங்கிடும் வேல் – மதி
மயங்கிடு வோர்க்கு மொளி
வழங்கிடும் வேல்!
இணங்காத பேரியத்
தெறித்திடும் வேல் – கதி
எங்கள் திருக்குமரன்
எறிந்திடும் வேல்!

கந்தன் திருக்கரத்தில்
சுமந்திடும் வேல் – எம்மைக்
காக்க துடித்து நிற்கும்
கதிர் வடிவேல்!
எந்த வினைகளையும்
அறுத்திடும் வேல் – ஒளி
இதயக் குகையினிலே
பாச்சிடும் வேல்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



28.

# உன்னை விடுவேனோ?

வேலவனே பாருமையா
வேதனைகள் தீருமையா!
காலனையே வென்றென்னைக்
காத்தருள வேண்டுமையா!
கோலமயில் ஏறிவந்து
குறைதீர்க்கும் முருகோனே!
ஞாலமதில் வேறுதுணை
யாருண்டு எந்தனுக்கே?

நெஞ்சிலே குடிகொண்ட
நெடுவேற் குமரையா
அஞ்சாதே என்றென்னை
ஆட்கொள்வ தெந்நாளோ?
துஞ்சுகிறேன் துயராலே
துடித்து வருந்துகிறேன்!
அஞ்சேலென் றெந்தனுக்கு
அபயமளித் தருளாயோ!

MARUTHAMUNAI PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நினைந்துருகி
'ஓம்' என்றே வணங்குவேன்!
என்னை வருத்து மிந்த
ஏக்கமெல்லாம் தீராதோ?
உன்னை அடைவதொன்றே
உடையேன் குறிக்கோளாய்
என்னை வருத்திடினும்
ஏற்க மனமிலையோ?

தஞ்சம் என்றுன் தாள்
சரணடைந்தேன் சரவணனே!
மிஞ்சாதென் பாவம்
மேதினியில் தீர்த்துவிடு!
கஞ்சனோ நீயெனக்கு
கருணைதான் புரிவதிலே!
நெஞ்சம் நிறையுமுந்தன்
நினைவன்றி வேறுளதோ?

என்னதான் பழிபாவம்
எளியேன் நான் செய்தாலும்
எனைத்தடுத்தாள வேண்டும்
இறையவனே முருகவேளே!
உன்னைத் தான் நினைத்ததல்லால்
உலகில் வேறொன்றறியேன்!
என்னைநீ புறக்கணித்தால்
எளிதில் நான் விடுவேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



29.

## தேரோடும் அழகு!

தேரோடும் உன்அழகை நான் பார்க்கவா?
தெள்ளு தமிழ்ப் பாமாலை நான் கோக்கவா?
பேரோடும் பிரணவத்தின் பொருள் ஓதினாய்!
பிரமனுக்கு கந்தன் நீ குரு ஆகினாய்!

நீறாகக் கவலைதனை நீ ஓட்டுவாய்!
நீயாக வந்தெனக் கருள் கூட்டுவாய்!
கூறாகப் பெற்றதனை துணைகொண்டாய்!
கும்பிடவும் வழிசெய்து பெருமை கண்டாய்!

ஊர்சிறக்க தெய்வானை மணமும் கொண்டாய்!
உள்மகிழ வள்ளியைத் தேடிக் கண்டாய்!
பார்சிறக்க பன்னிரு கரமும் கொண்டாய்!
பாலனே குமரனென் றாகக் கண்டோம்!

தங்கரதம் எழுந்தருளி உலாவும் வந்தாய்!
தமிழர்தம் வாழ்வுக்குப் பொருளாய் நின்றாய்!
தாங்காது வேதனைகள் துயரால் வெந்தோம்!
தங்கவேல் முருகா நீ அருளும் தருவாய்!

**வீரகேசரி**
**ஆகஸ்ட் 95**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



30.

## வேறு தெய்வம் ஏது?

தெய்வம் ஒன்று இருக்குது என்றால்
தெரியும் அது நீயென்று!
மெய்யே உன்னை வணங்குவதும்
வேறு தெய்வம் அதிலேது?

என்பு சதை இரத்தம் எல்லாம்
என்னுடைய தில்லை என்பேன்!
பின்பு அதை வளர்த்தவன் நீயே
பேணிக் காத்திடல் வேண்டுமே!

ஆண்டு கொண்ட பின்பும் இந்த
அடிமைக்கு ஏது உரிமை?
ஆண்டவன் நீயன்றோ இனியிந்த
அடியவனைக் காக்க வேண்டுமே!

தொண்டு செய்யும் அடிமை நான்
தொடர்ந்து பாதம் பணிவேனே!
விண்டு சொல்ல முடியுமோ எனக்கு
விருப்பு வெறுப்பு இனியேது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட பணி செய்வதென் கடனே!
இட்ட பிச்சை ஏற்பேனே!
விட்ட குறை தீர்க்க வேண்டும்!
வேலவனே அருள் தர வேண்டுமே!

தினத்தந்தி
ஆகஸ்ட் 95.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



31.

## நல்லைக் கந்தன் அருள்!

இல்லை இல்லை இனிக் கவலை இல்லை!
தொல்லை தருகின்ற ஊழ்வினை இல்லை!
அல்லல் தருகின்ற நோய் பிணி இல்லை!
வெல்ல ஒருபகையும் இனியெனக் கில்லை!

வெல்ல முடியுமோ? வேதனை தீருமோ?
தொல்லை குறையுமோ? துயரும் மறையுமோ?
நல்லைக் கந்தன் அருள்தான் இல்லையேல்?
இல்லை துயர் என்று இருக்க முடியுமோ?

வல்லவன் நான் என்று இருந்த தில்லை!
தொல்லை பிறர்க்கேதும் புரிந்த தில்லை!
நல்லன செய்திட நான் தயங்கிய தில்லை!
அல்லதை தூற்றிட அணுவும் தவறிய தில்லை!

வெல்லலாம் என்று இறுமாந்த தில்லை!
வேலவன் துணை இன்றி இருந்த தில்லை!
சொல்லால் பாடி துதிக்கவும் இல்லை!
சொல்லியே அருளைப் போற்றிய தில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அவனருள் என்று இருக்கின் றேனே!
இல்லை இனித்துயர் என்றருள் கின்றான்!
அல்லல் தீர்த்து அபயம் அளிக் கின்றான்!
நல்லை நகர் வாருங்கள் நாமும் போற்றுவோம்!

தினத்தந்தி
ஆகஸட் 95.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



32.

## அருள்வாயே!

நல்லூர்ப் பதிவாழ் முருகோனே1
நாதா குகனே அருள்வாயே!
கொல்லும் பகையை அழித்திடவே
குறியாய் வேலை விடுவாயே!

அல்லும் பகலும் அனவரதமும்!
அடியார் துயரில் வருந்துகிறார்!
வெல்லும் வகையை அறிந்திடவே
வேலவா நீ யருள் புரிவாயே!

சொல்லும் செயலும் நீயாகும்!
சுந்தரா நீயின்றி வாழ்வேது?
கல்லும் கனிந்திடக் கதறியழுவது
காதில் இன்னும் விழவில்லையோ?

ஏழை எளியவர் துயருறவே
ஏனோ பார்த்து நீயிருப்பாய்?
வேளை இன்னும் வரவில்லையோ?
வேலவா மனமும் இரங்கலையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் முடிந்தால் நீயெதற்கு?
ஏறிட மயிலும் தானெதற்கு?
சொல்ல முடியா துயரடைய
சங்காரம் செய்யும் வேலெதற்கு?

வேளைக்கு வந்திட வேண்டும்!
வேலவா அருளிட வேண்டும்!
நாளைக்கு நாம்வாழ வேண்டும்!
நல்லூர்க் கந்தா அருள்புரிவாயே!

**தினத்தந்தி**
**ஆகஸ்ட் 95**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



33.

## முருகனையே நாடு!

வேதனை தீர்த்திட அந்த வேலனைப் பாடு!
வெற்றி பெற்றிட வெற்றி வேலனையே பாடு!
சாதகம் செய்திடு அச்சன் மருகனைப் பாடி!
சகலதும் கூடும் வாழ்வில் சரவணன் நாடில்!

கவலை தீர்ந்திட அந்த கந்தனைப் பாடு!
களிப்பினை அடைந்திட கந்த வேளையே பாடு!
காவல் நின்றிடும் கார்த்தி கேயனைப் பாடு!
கற்றது பலித்திட கதிர் வேலனைப் பாடு!

சோதனை தீர்ந்திட சுந்தர வேலனைப் பாடு!
சுகம் தனைப் பெற்றிட சுந்தரே சனையே பாடு!
காதலை வென்றிட கதிர் காமனைப் பாடு!
கனிந்து உள்ளம் உருகிட கடம்பனைப் பாடு!

வளத்தினை அடைந்திட வடிவேற் கரசனைப் பாடு!
வரவிலை என்றால் வள்ளி மயிலைப் பாடு!
உளத்தினில் நிறைந்திட உமை மகனைப் பாடு!
ஓடிவந் தருளிட ஓங்கார முருகனைப் பாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் நீங்கிட அந்தக் குமரனைப் பாடு!
குணமாய் கொள்வான் எங்கள் குகனையே பாடு!
முற்றும் தீர்ந்திடும் எங்கள் முருகனைப் பாடு!
முருகா முருகா எனமன முருகியே பாடு!

பாடிடத் தோன்றிடில் எங்கள் பரமனைப் பாடு!
ஆடிட வேண்டில் காவடி அவனுக் காடு!
நாடிட வேண்டில்! நல்லூர் முருகனை நாடு!
கூடிட குறைவற வாழவே குமரனைப் பாடு!

**தினத்தந்தி**
**ஆகஸ்ட் 95.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



34.

## போற்றிப்பாடுவேன்!

ஒருவனே உலகின் முதல்வனே! ஓமின் தலைவனே!
முருகனே முழுமதற் கடவுளே! முக்கணன் மகனே!
உருவனே அறியா அருவனே! அருவுரு வானவனே!
வருவனே உன்னை நாடியே! வாழ்த்தி நிற்பனே!

கருவிலே வளர் கந்தனே! உமை மைந்தனே!
அருவிலே என்னை ஆண்டவா! உன்னை வேண்டவா!
கருணையே வடிவம் ஆனவா! என்னை ஆண்டவா!
விரும்பியே உன்னை ஏற்றுவேன்! போற்றியே பாடுவேன்!

உருகினேன் நெஞ்சம் ஓடிவா! உன்னை நாடினேன்
நெருங்கியே தஞ்சம் தேடினேன்! நினைவிலே நிற்கவா!
தருகிறேன் என்னையே தலைவனே! ஏற்கவா துயர்தீர்க்கவா!
வருகிறாய் என்றே நான் வாழ்த்தினேன்! வாழி பாடினேன்!

தாளை வணங்கினேன்! தவிக்க வைப்பதும் ஏனோ?
வாழ வைப்பதும் வாழ்த்தி அணைப்பதும் நீதானே!
ஆள வைப்பதும் ஆண்டு கொள்வதும் நீ தானே!
ஏழை என்னை ஏற்றம் பெற வைத்ததும் நீ தானே!

**தினத்தந்தி**
**ஒக்டோபர் 95.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



35.

## ஒன்றாய் வாழவேணும்!

மேழிபிடித்து உழுத தெல்லாம் முருகோனே1
மேதினி சிறக்க வென்று முருகோனே!
ஆழிசூழ் இலங்கை எல்லாம் முருகோனே!
அன்பு மயமாக வேண்டும் முருகோனே!

நாற்று நட்டு நாம் உழைத்தோம் முருகோனே!
நாடு போற்ற வாழவென்று முருகோனே!
வேற்று நாட்டு உதவி எல்லாம் முருகோனே!
வேண்டாம் என்று பாடுபட்டோம் முருகோனே!

சேற்றில் விளைத்து பயிர் வளர்த்து முருகோனே!
செந்நெல் எங்கும் நிறைத்தோம் முருகோனே!
சோற்றுக் கினிப் பஞ்சமில்லை முருகோனே!
சோதனை நீங்கி வாழ வேணும் முருகோனே!

பொங்கல் இன்று வந்ததென்று முருகோனே!
பூசை செய்து நாம் மகிழ்ந்தோம் முருகோனே!
பொங்கும் எங்கள் உள்ளம் தன்னை முருகோனே!
போதும் என்று தணிப்பாயே முருகோனே!

LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடு துயர் நீங்க வேண்டும் முருகோனே!
கெட்ட கனவாய் மாறவேணும் முருகோனே!
நாடு நகர் செழிக்க வேண்டும் முருகோனே!
நாங்கள் ஒன்றாய் வாழவேணும் முருகோனே!

**வீரகேசரி**
**ஜனவரி 96.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



36.

## யாவர்க்கும் இறைவன்!

கல்லிலும் கனிவான உருவம் அவன்!
சொல்லிலும் இனிய முருகன் அவன்!
அல்லிலும் பகலிலும் இறைவன் அவன்!
சொல்லியே துதிப்போர்க்கு தோழன் அவன்!

வள்ளி தெய்வானைக் குகந்த கணவனன்!
எள்ளி நகைப்போர்க்கும் இறைவன் அவன்!
உள்ளியே துதிப்போரில் உறைவான் அவன்!
புள்ளி மயில்மீது ஏறிவிளையாடும் குகன்!

பரமன் என்றழைப் போர்க்கு முருகன்!
பாமரர் யாவர்க்கும் இறைவன் அவன்!
தாமரை மலரினில் தவழ்ந்தான் அவன்!
தாளிணை பணிவோர்க்கு வேலன் அவன்!

கருணையில் சிறந்த அருளாளன் அவன்!
கனிவுள்ள நல்ல கொடை யாளன் அவன்!
பெருமையில் சிறந்த பேராளன் அவன்!
பேர்சொல்லித் துதிக்க பேரருள் புரிவானே!

**நவமணி**
**நவம்பர் 97.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



37.

## தேடி அலைவதேன்?

மனிதன் பிறந்தான் மண்ணிலே!
மறைந்தது தர்மம் வாழ்விலே!
புனிதனாய் தேவனாய் வாழ்ந்தவனே!
புழுவினும் கீழாய் போனானே!

மனிதனை மனிதனாய் மாற்றிடவே!
புனிதர்கள் மண்ணில் தோன்றினரே!
இனிதாய் வேதங்கள் ஓதினரே!
இன்னும் சமயங்கள் தோன்றினவே!

ஏற்றவர் போற்றினர் தேற்றினரே!
மாற்றம் வாழ்வில் கண்டிலரே!
தோற்றவர் மேலும் நெறிதவறி
தேவைகள் நிறைவேற அலைந்தனரே!

அதர்மம் ஓங்கித் தழைத்ததுவே!
அழிவும் நெருங்கி வந்ததுவே!
அப்போது இறைவன் வருவேனென்றார்!
அவரின் வருகையைத் தெரிந்திலமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் தாமரை மலரானால்!
உறைவான் முருகன் அதன்மேலே!
தேடியோடி அலையத் தேவையில்லை!
தேவைகள் நிறைவேற அருள்வானே!

வீரகேசரி
ஜூன் 2000





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 38.

## அவன் அருளால் பாடினேன்!

சேவல் காலையில் கூவுது!
சிந்தனை முழுவதும் சொல்லுது!
ஆவல் மீதூர முருகனை
அன்பாய் சென்று தொழுவோமே!

காலையில் சேவல் கூவியே
கடிதில் எம்மை எழுப்புமே!
வேலை வணங்கச் சொல்லியே!
விடியற் பொழுதிற் கூவுமே!

சேவல் கூவும் போதெல்லாம்
சிந்திப் போம்நாம் அவன் நாமம்!
காவல் நமக்கு கதிர் வேலாம்!
கவலை எல்லாம் மறப்போமே!

அத்தனை கொடிய அசுரேசன்
அழகன் முருகன் அருளாலே
எத்தனை உயரிய இடத்திலே
என்றும் நிலைத்து நின்றிட்டான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலாய் சேவற் கொடியாக
மனமே யிரங்கி எற்றிட்டான்!
ஐயா உந்தன் கருணையினை
அறிந்து பெறவே வணங்குகிறேன்!

முருகன் அருளைப் பாடவே!
முடிந்த மனிதர் இல்லையே!
அருளைத் தந்தது அவனேயாம்!
அதனால் பாடல் சொன்னேனே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 39.

## ஊஞ்சல் பாடல்

(பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும் தெய்வத் திருமணத்துக்குப் பின்னர் பாடுவதற்கு எழுதப்பட்ட பாடல் இது)

அற்புதமாம் சித்திகளுக் கரசன் எங்கள்
ஆனைமுகன் பொற்கமலப் பாதம் வாழ்க!
கொற்றவேற் படைகொண்டு வாகை சூடும்!
குமரவே ளமர்ந் தாடும் ஊஞ்சல் பாட
நற்றமிழ்பா தரும்வாணி நயனம் வாழ்க!
நறுங்கமலா சனிகாதற் கண்ணன் வாழ்க!
பொற்புடைய திருவூஞ்சல் பொருந்தும் வேற்கை
புள்ளிமயி லேறுகுகன் புகழும் வாழ்க! 01.

ஆர்க்குமனக் கடல்மூழ்கி யமைதியென்ற
அரும்பவளக் கொடிசேர்த்து அலரும் கோத்து
வேர்க்கொண்ட சிந்தனையாம் விருட்சம் தன்னில்
வினைதீர்ந்த உறுதியெனும் கிளைவிட்டத்தில்
சேர்த்தியபொன் னூஞ்சலிலே தெய்வ யானை
சேயிழையாம் வள்ளியொடு சேர்ந்த மர்ந்து
பார்த்திலக மாமெங்கள் பாண்டிருப்பில்
பச்சைமயில் வேலவரே ஆடீர் ஊஞ்சல்! 02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமெனும் பாருலக இடர்கள் தீர்ந்து
இதயமெனும் திண்ணப்பொற் பலகை சேர்த்தி
நன்மைகளாம் மலர்கோடித் தொங்கல் தூக்கி
நறுங்கமலச் சிந்தனையால் சித்தரித்து
கர்மவினை தீர்ந்தமணிக் கருத்துக் கூட்டி
கற்பகமாம் நாவசைத்துக் கவிதை பாடி
மன்னுபுகழ் மருதஞ்சூழ் பாண்டிருப்பில்
மயிலேறும் வேலவரே ஆடீர் ஊஞ்சல்! 03.

ஈறில்லா ஆசைகளை இழைக ளாக்கி
இறுக்கிநிர் மலமென்ற வடமாய்க் கோத்து
பேறிதுவே யெனும் பக்திப் பலகை சேர்த்தி
பேசுகின்ற வார்த்தையலர் பிணைத்துத் தூக்கி
மாறில்லாத் திருமறையின் மலர்ப்பா சிந்தி
மாதவத்தின் பேறாம் பொன்னூஞ்சல் இட்டோம்
சாருமெழில் மருதஞ்சூழ் பாண்டிருப்பில்
சக்திவடி வேலவரே ஆடீர் ஊஞ்சல்! 04.

உண்மையெனும் வைரமணித் தூண்கள் நாட்டி
உற்றமன வுறதியயைப் பொன்னுலாத்தை யிட்டு
வண்மையெனும் ஆடகப்பொன் பவளம் கூட்டி
வயங்குமுயர் வடங்கோத்துக் கந்த சஷ்டி
திண்ணமுது விரதப்பொற் பலகை பூட்டி
தேவர்களும் மலர்மாரி பொழியக் காட்டி
பண்ணொழுகு பாவளஞ்சூழ் பாண்டிருப்பில்
பாலகுரு சண்முகனே ஆடீர் ஊஞ்சல்! 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்வினையாம் சூரனுடல் கிழிய தூக்கி
உத்தரிப்பாம் தேவர்க்கா யொண்வேல் தூக்கி
ஆழ்த்தபயனுரும் பிறவிப்பே ராழி தாண்டும்
அற்புதப்பே றழித்தவரே அமுதே தேனே!
சூழ்தெங்கில் நெய்தலிளந் தென்றல் தீண்ட
சுனைகளிலே கயல் கெண்டை வாளை தாண்ட
வாழ்வுமலர் கமழ் மருதம் பாண்டிருப்பில்
வள்ளிமகிழ் வேலவரே ஆடீர் ஊஞ்சல்! 06.

எறியாழி யலைவந்து ஆடை தூவ
இளவாடை மணல்மீது பொன்னைப் பரவ
நெறியோடு செவ்வாழை கமுகும் ஆட
நெகிழ்வுற்ற இளந்தெங்கு யாழிற் பாட
அறிவாளர் பாமாலை தோளிற் சூட
அழல்கின்ற நெஞ்சங்கள் அமைதி நாட
செறிகல்வி வளர் செல்வப் பாண்டிருப்பில்
சேமம்செய் சேயோனே ஆடீர் ஊஞ்சல்! 07.

ஏடொன்றி மதர்ப்புற்ற நீபம் சூடி
இதயங்க ளெனுமன்புக் கனியை நாடி
வாடாத மலர்க்காவாம் வாய்மை தூவி
மணிவாக்கி னொலியால்நின் அருள்வி னாவி
நீடாழி யுலகத்து மறையைந் தாக
நிற்கின்ற மறையோதும் பாண்டிருப்பில்
சூடாத மணியாக இலங்குஞ் சோதி
சுடர்வேலுக் கரசேவந் தாடீர் ஊஞ்சல்! 08.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனுக் கிளையோனே அமிர்தக் குன்றே
அனபர்தமக் குள்ளுறும் அருந்தே னூற்றே
செங்கமலத் தவிசென்ற இதயத் துள்ளே
தித்திக்கச் சொட்டுகின்ற தெய்வக் கள்ளே
பங்யக்கண் ணருள்வள்ளல் பரந்தா மன்செய்
பாண்டவர் வாழ் பதியெங்கள் பாண்டிருப்பில்
மங்கையராம் தெய்வானை வள்ளி யோடும்
மகிழ்ந்துவடி வேலவரே ஆடீர் ஊஞ்சல்! 09.

ஒப்பரிய செந்தமிழிற் தூண்கள் நாட்டி
ஒண்கவிதை விட்டத்தில் உறுதி பூட்டி
செப்பரிய சந்தமெனும் வடம் புனைந்து
செய்யபொருட் பீடத்தின் பலகை சேர்த்தி
செப்பமெழப் பாவாணர் சிந்து பாட
சேயிழையார் மருங்கிற் சாமரை யிரட்ட
எப்பாலும் புகழோங்கு பாண்டிருப்பில்
ஏரகத்துச் செட்டியாரே ஆடீர் ஊஞ்சல்! 10.

ஓங்கலிடத் தமர்குமரா ஆடீர் ஊங்சல்!
ஒப்பரிய வடிவேலா ஆடீர் ஊஞ்சல்!
பாங்கமர்ந்த வள்ளிதெய்வ யானையோடு
பண்டிதரே யுள்ளமகிழ்ந் தாடீர் ஊஞ்சல்!
தேங்குவளம் திகழ்மாரி பொழிய ஆடீர்!
தெய்வீகத் தமிழ்விளங்க ஆடீர் ஊஞ்சல்!
ஆங்கமலாசனி விளங்கு பாண்டிருப்பில்
அமைதியொடு நலம்வாழ ஆடீர் ஊஞ்சல்! 11.

[நிறைந்தது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11061 L

11061 L

PUTHAMUNAI
PUBLIC LIBRARY

LENDING SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-955-54011-0-4

9789555401104

Rs. 220/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org